சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் 2010–11 ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் சிறப்பு மாநில நிதியுதவியின் கீழ் ரூ.25.00 கோடியில் (ரூபாய் இருபத்தைந்து கோடி மட்டும்) செயல்படுத்தவுள்ள புதிய பயிற்சித்திட்டங்களுக்கான நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (சிஉதி1) நலத்துறை**

அரசாணை (நிலை) எண். 115 நாள்: 23.9.2010

புரட்டாசி 7, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. அரசாணை(ப) எண்.318/ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை/ நாள் 15.12.2009.
2. அரசு நேர்முக கடித எண்.8447/சிஉதி1/2010–1 /ஆதி(ம)பந/ நாள். 3.5.2010.
3. தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கடித எண் டி2/2534/ 2010, நாள் 21.5.2010.

-----

**ஆணை**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி சமுதாயத்தில் மற்றவர்களுக்கு இணையாக வாழ வழி வகுக்க வேண்டும் என்ற கருத்தினை மையமாகக் கொண்டு, தாட்கோ மூலம் பல்வேறு செயல் திட்டங்களை அரசு ஒவ்வோர் ஆண்டும் திறம்பட நிறைவேற்றி வருகிறது. மேலும், சுயதொழில் வேலைவாய்ப்பு, தனிநபர் வருவாய் ஈட்டும் பல்வேறு திட்டங்கள், நிலமற்ற ஆதிதிராவிடர்களுக்கு நிலம் வழங்கும் திட்டம் மற்றும் நலிவுற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு தொடர்ந்து வருவாய் ஈட்டும் வகையில் தொழில்கள் துவங்குதல் போன்ற பல்வேறு திட்டங்கள் ஒவ்வோர் ஆண்டும் மாநில செயல் திட்டம் மூலம் மைய அரசின் சிறப்பு நிதியுதவியைப் பயன்படுத்தி செயல்படுத்தி வருகின்றது. மேற்படி மைய அரசின் சிறப்பு நிதியுதவி போன்று மாநில சிறப்பு நிதியுதவி ரூ.25.00 கோடியில் (ரூபாய் இருபத்தைந்து கோடி மட்டும்) ஒவ்வொரு ஆண்டும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் திறன்வளர்க்கும் பயிற்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

2. 2010–2011–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது, பேரவையில் ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில், கீழ்க்கண்டுள்ள திட்டங்கள் சிறப்பு மாநில நிதி மூலம் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. CAT/ XAT பயிற்சி
2. தொழிற்சார் சிறப்புப் படிப்புகளுக்கான நிதியுதவி
3. தேசிய நிறுவனங்கள் மூலம் பயிற்சி
4. உணவு பரிமாறுதல் / உணவு தயாரித்தல் மற்றும் பதப்படுத்துதல்
5. உதவி செவிலியர் பயிற்சி
6. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி
7. ஜேசிபி பொக்லைன், Forklift இயக்குதல் பயிற்சி
8. மின்சாதனங்களை பழுது பார்க்கும், குளிர் சாதனப் பெட்டி மற்றும் டீசல் கம்மியர் (Diesel Mechanic), பொருத்துநர் (Fitter), வாகன கம்மியர் (Motor Mechanic), மின் குறைந்தழுத்த மற்றும் உயர் அழுத்த கம்பி நுட்பாளர் பயிற்சி
9. கணினி பயிற்சி
10. கண்சிகிச்சை உதவியாளர் பயிற்சி
11. தொழில் முனைவோருக்கு மூலதன உதவி
12. மருத்துவ ஆய்வுக் கூட தொழில் நுட்பாளர் பயிற்சி
13. அழகுக்கலை பயிற்சி
14. தையற்கலை பயிற்சி
15. போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி
16. சில்லரை மேலாண்மை, சுற்றுலா மேலாண்மை மற்றும் விமான பயணச்சீட்டு பதிவு செய்தல் (Air Ticketing) பயிற்சி
17. ஆதிதிராவிட கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி

3. அமைச்சர் (ஆதிந) அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் 2010 – 2011 –ஆம் நிதியாண்டில், சிறப்பு மாநில நிதியுதவித்திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் கீழ்க்குறிப்பிட்டுள்ள திட்டங்களை செயல்படுத்த தாட்கோ மூலம் ரூ.25,00,00,000/– (ரூபாய் இருபத்தைந்து கோடி மட்டும்) மாநில அரசின் சிறப்பு நிதியுதவியாக விடுவித்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | பயிற்சியின் பெயர் | செயல் இலக்கு எண்ணிக்கை | நிதி இலக்கு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| அ. | ஆரம்பநிலை செயல் திறன் பயிற்சி | | |
| | கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி | 250 | 50.00 |
| | ஜேசிபி, பொக்கலைன், போர்க் லிப்ட் இயக்குபவர் பயிற்சி | 200 | 12.00 |
| | மின் பணியாளர், டிசல் மெக்கானிக், பிட்டர், மோட்டார் மெக்கானிக் பயிற்சி | 2000 | 280.00 |
| | அழகு கலை பயிற்சி | 500 | 30.00 |
| | தையல் கலை பயிற்சி | 500 | 15.00 |
| | கூடுதல் | 3450 | 387.00 |
| ஆ. | தேசிய நிறுவனங்கள் மூலம் பயிற்சி | | |
| | ஆயத்த ஆடை வடிவமைப்புப் பயிற்சி (ATDC & NIFT) பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி (CIPET) காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி (CFTI) & (FDDI), திரைப்படம் துறை சார்ந்த பயிற்சி (NFDC) | 1300 | 220.00 |
| இ. | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் போக்குவரத்து மேலாண்மை சார்ந்த பயிற்சிகள் | | |
| | உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல் பயிற்சி | 1000 | 130.00 |
| | சில்லரை மேலாண்மை, சுற்றுலா மேலாண்மை, விமான பயணச்சீட்டு பயிற்சி | 1200 | 144.00 |
| | கூடுதல் | **2200** | **274.00** |
| ஈ | மக்கள் நலம் பேணுதல் குறித்த பயிற்சிகள் | | |
| | உதவி செவிலியர் பயிற்சி | 125 | 62.50 |
| | கண்சிகிச்சை உதவியாளர் பயிற்சி | 100 | 10.00 |
| | மருத்துவ ஆய்வுக் கூட தொழில் நுட்பாளர் பயிற்சி | 300 | 30.00 |
| | கூடுதல் | 525 | 102.50 |
| உ. | கணினி மற்றும் தகவல் தொழிற்நுட்ப பயிற்சிகள் | | |
| | CADD / CAM | 900 | 54.00 |
| | Tally Computerized Accounting | 2000 | 140.00 |
| | Hardware Networking | 1000 | 45.00 |
| | Multimedia & Animation | 500 | 75.00 |
| | IT – Finishing School – Technical | 1500 | 180.00 |
| | IT – Finishing School – Non Technical | 1500 | 180.00 |
| | கணினி பயிற்சி – கூடுதல் | 7400 | 674.00 |
| ஊ. | போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள் | | |
| | CAT / XAT போன்ற தேர்வுகளுக்கான பயிற்சி. | 100 | 18.00 |
| | தொழிற்சார் சிறப்புப் படிப்புகளுக்கான நிதியுதவி | 165 | 14.50 |
| | போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி | 2100 | 120.00 |
| | ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி | 4000 | 120.00 |
| | கூடுதல் | 6365 | 272.50 |
| எ. | தொழில் முனைவோருக்கு மூலதன உதவி | 5 | 125.00 |
| ஏ. | ஆதிதிராவிடர்/ பழங்குடியின மாணவ/ மாணவியர்களை நற்பெயர் பெற்ற தனியார் உண்டி உறைவிடப் பள்ளிகளில் சேர்த்தல் | 1155 | 320.00 |
| ஐ. | நிர்வாகம் / விளம்பரம் / விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றிற்கான செலவினம் | 0 | 125.00 |
| | மொத்தம் | 22400 | 2500.00 |

அ. ஆரம்ப நிலை செயல்திறன் பயிற்சிகள் (ரூ. 387.00 இலட்சம்)

ஆரம்ப நிலை திறன் பயிற்சிகளான மின் பணியாளர், டீசல் மெக்கானிக், ஏசி மெக்கானிக், பிட்டர், வெல்டர், மோட்டார் மெக்கானிக், ஜேசிபி/பொக்கலின், போர்க்லிப்ட் இயக்குபவர்கள் போன்ற பயிற்சிகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு உள்ளதால் இப்பயிற்சிகள் மத்திய மற்றும் மாநில அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் வழங்கப்படும்.

கனரக வாகனம் ஒட்டுபவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் உள்ளதால் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் இளைஞர்களுக்கு கனரக வாகன ஒட்டுநர் பயிற்சி சாலை போக்குவரத்து நிறுவனம் (Institute of Road Transport), அசோக் லைலேண்ட் (Ashok Leyland), டி.வி.எஸ் (TVS) போன்ற நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

தையல் கலை, அழகுகலை போன்ற பயிற்சி பெற்றவர்கள் சுய தொழில் மற்றும் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற வாய்ப்பு உள்ளதால் இத்தகைய பயிற்சிகள் நற்பெயர்பெற்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும்.

மேற்காணும் பயிற்சிகள் **3450** ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இளைஞர்களுக்கு ரூ.**387/–** இலட்சம் (ரூபாய் முன்னூற்று எண்பத்து ஏழு இலட்சம் மட்டும்) செலவில் அளிக்கப்படும்.

ஆ. தேசிய நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் (ரூ.220.00 இலட்சம்)

சென்னை மாநகரில் செயல்பட்டுவரும் தேசிய நிறுவனமான ஆடை வடிவமைப்பு மற்றும் பயிற்சி நிறுவனம் (ATDC) மற்றும் தேசிய ஆடை அலங்காரத் தொழில் நுட்ப நிலையம் (NIFT), மத்திய பிளாஸ்டிக் தொழில் நுட்ப நிலையம் (CIPET) மத்திய காலணி தயாரித்தல் பயிற்சி நிறுவனம் (CFTI), காலணி வடிவமைத்தல் வளர்ச்சி நிறுவனம் (FDDI) மற்றும் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் (NFDC) போன்ற மத்திய அரசு நிறுவனங்களின் மூலம் முறையே ஆயத்த ஆடை வடிவமைப்பு, பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல், காலணி போன்ற தோல் பொருட்கள் தயாரித்தல், திரைப்படம் சார்ந்த விசுவல் மீடியா, ஒலிப்பதிவு, சினிமாடோகிராபி ஆகிய பயிற்சிகள் **1300** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ரூ.**220/–** இலட்சம் (ரூபாய் இருநூற்று இருபது இலட்சம் மட்டும்) செலவில் அளிக்கப்படும்.

இ. விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் போக்குவரத்து மேலாண்மை, சார்ந்த பயிற்சிகள் (ரூ.274.00 இலட்சம்)

சில்லரை மேலாண்மை, சுற்றுலா மற்றும் போக்குவரத்து மேலாண்மை, விமான பயணச்சீட்டு வழங்குதல் போன்ற பயிற்சி பெற்றவர்களுக்கு அந்தந்த துறைகளில் உடனடி வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதாலும் உணவு தயாரித்தல், பதப்படுத்துதல், உணவு பரிமாறல் போன்ற பயிற்சிகள் மாநில உணவக மேலாண்மை மற்றம் சமையற்கலை நிறுவனம் (State Institute of Hotel Management & Catering Technology) துவாக்குடி, திருச்சி மற்றும் தமிழக அரசின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனங்களில் நட்சத்திர தரம் பெற்ற உணவு விடுதிகளில், உள்நிறுவனப்பயிற்சி (In Plant Training) -யுடன் வழங்கினால் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள முன்னோடி உணவு விடுதிகளில் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதால் **2200** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களுக்கு ரூ.**274/–** இலட்சம் (ரூபாய் இருநூற்று எழுபத்து நான்கு இலட்சம் மட்டும்) செலவில் இப்பயிற்சிகள் அளிக்கப்படும்.

ஈ. மக்கள் நலம் பேணுதல் குறித்த பயிற்சிகள் (ரூ.102.50 இலட்சம்)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களுக்கான உதவிச் செவிலியர் பயிற்சி, மாநில அரசின் பதிவு பெற்ற பயிற்சி நிறுவனங்களின் மூலம் அளிக்கப்படும். இதனால், தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ இல்லம் (Nursing Home) ஆகியவற்றில் உதவி செவிலியர்களாக பணி புரிய வாய்ப்புள்ளது என்பதாலும், தேசிய மற்றும் மாநில அளவில் நற்பெயர் பெற்ற கண் மருத்துவமனைகளில் கண் சிகிச்சைக்கான உதவியாளர் (Ophthalmic Nursing Assistant) பயிற்சி பெற்றவர்கள், கண் மருத்துவமனையில் பணிபுரிய வாய்ப்பு உள்ளதாலும், மருத்துவ ஆய்வுக் கூட தொழில் நுட்பாளர் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதாலும் இப்பயிற்சிகளை **525** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ரூ.102.50/– இலட்சம் (ரூபாய் நூற்றியிரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவில் அளிக்கப்படும்.

உ. கணினி மற்றும் தகவல் தொழிற்நுட்ப பயிற்சிகள் (ரூ. 674.00 இலட்சம்)

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவிகளுக்கு கணினி மற்றும் தகவல் தொழில் நுட்பம் துறையில் வேலை வாய்ப்பு பெற கணினி துறையில் பல்வேறு பயிற்சிகளான CAD/CAM, Tally, Hardware, Networking with Certification, Multimedia & Animation, ITES – BPO/Call Centre, IT – Finishing School – (Technical), IT – Finishing School – (Non Technical) போன்ற பயிற்சிகள் **7400** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ரூ. **674/–** இலட்சம் (ரூபாய் அறுநூற்று எழுபத்து நான்கு இலட்சம் மட்டும்) செலவில் அளிக்கப்படும்.

ஊ. போட்டி தேர்வுகளுக்கான பயிற்சிகள் (ரூ.272.50 இலட்சம்)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு மென் திறனை வளர்க்கவும் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் திறனை வளர்க்கவும், ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி, கல்லூரியில் பயின்று வரும் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

இந்திய உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படிப்பதற்கு CAT/XAT போன்ற நுழைவு தேர்வுகளில் தேர்ச்சி பெறுவது அவசியம் என்பதால் அதற்கான பயிற்சி வழங்கலாம். மேலும் பட்டயக் கணக்கர்/செலவுக் கணக்கர் போன்ற படிப்புகளில் ஆதிதிராவிட இளைஞர்களின் ஆர்வத்தை அதிகரிக்க இப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு பயிற்சி கட்டணங்களுக்கான நிதியுதவியும் IIT JEE, AIEEE, போன்ற நுழைவு தேர்வுகளில் வெற்றி பெற்று சிறந்த தொழில் நுட்பக்கல்லூரிகளில் பொறியியல் படிக்க தேவையான நுழைவுத் தேர்வுக்கான பயிற்சிக்கும், BSRB, RRB, LIC, etc., போன்ற போட்டி தேர்வுகளில் வெற்றி பெற்று வேலைவாய்ப்பு பெறும் வகையில் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள் **6365** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ரூ.**272.50/–** இலட்சம் (ரூபாய் இருநூற்று எழுபத்தியிரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவில் மேற்படி போட்டி தேர்வுகளுக்கான பயிற்சி அளிக்கப்படும்.

எ. தொழில் முனைவோருக்கு மூலதன உதவி (ரூ.125.00 இலட்சம்)

ஆதிதிராவிடர்/பழங்குடியின மக்களில் பெரும்பான்மையோர் சிறந்த தொழில் முனைவர்களாக வரக்கூடிய தகுதிகள் பெற்றிருந்தும், பொருளாதார வசதியின்மையால் தொழில் துவங்க இயலாத நிலை உள்ளது. இவர்களுக்குத் தேவைப்படும் மூலதனத்தினையோ அல்லது தொழில்கள் தொடங்க தேவைப்படும் வசதி வாய்ப்புகளையோ உருவாக்கி கொடுத்து ரூ.**2.50**

கோடிக்கு (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) குறையாத திட்டத்தொகையுடன் தொழில் செய்ய உள்ள 5 தொழில் முனைவோரை ஊக்கப்படுத்த சிறப்பு மூலதன மான்யமாக திட்டத்தொகையில் 10% அல்லது ரூ.50/- இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) இவற்றில் குறைந்த தொகை இறுதி நிலை மானியமாக (Back ended Subsidy) வழங்கப்படும். இச்சிறப்பு மூலதன மானியம் பிற துறை/ அமைச்சகங்களிலிருந்து வழங்கப்படும் மானியத்துடன் சேர்த்து கூடுதலாக வழங்கப்படும். மீதத்தொகையினை தேசிய மயமாக்கப்பட்ட வங்கி அல்லது நிதி நிறுவனங்கள் மூலமாக கடனாகவும் பெற்று இத்திட்டத்தினை செயல்படுத்தலாம். இத்திட்டத்திற்கு ரூ.125/- இலட்சம் (ரூபாய் நூற்று இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஏ. சிறப்பாக பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியின மாணவ மாணவியருக்கு உயர்தர கல்வி கொடுத்தல் (ரூ.320.00 இலட்சம்)

தற்போது கிராமங்களிலும் திறமை வாய்ந்த பள்ளிகளிலும் ஏழை எளிய குழந்தைகள் கல்வி பயின்று வருகிறார்கள். அப்படி படித்து வரும் ஏழை எளிய குழந்தைகளிடமிருந்து சிறப்பாகப் பயிலக் கூடிய குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்கு ஒரு உயர் தரமான (Top Class Education) கல்வியை கொடுத்தல் அவர்கள் எதிர்காலத்தில் அனைத்து துறைகளிலும், மற்றவர்களைப் போல சிறந்து விளங்குவார்கள்.

எனவே, தமிழ்நாட்டில் 5ம் வகுப்பு முடித்து 6ம் வகுப்பு செல்லும் ஆதிதிராவிடர்/பழங்குடியின மாணவ மாணவியர்களை ஒரு தனித் தேர்வு நடத்தி வட்டாரத்திற்கு ஒரு மாணவர் வீதம் தேர்ந்தெடுத்து மொத்தம் உள்ள 385 வட்டாரங்களில் (Blocks) உள்ள 385 மாணவ /மாணவியரை நற்பெயர் பெற்ற சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6ம் வகுப்பில் சேர்ந்து அவர்களைத் தொடர்ந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயில அனுமதி வழங்கலாம். மேலும் சென்ற ஆண்டு இத்திட்டத்தின் 6ம் வகுப்பில் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த வருடம் 7ம் வகுப்பு பயில ஆகும் செலவு மற்றும் 7ம் வகுப்பில் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த வருடம் 8ம் வகுப்பு பயில செலவினத்தையும் வழங்கலாம், ஆக மொத்தம் 1155 மாணவர்களுக்கு ஆகும் செலவினம் ரூ.320/– இலட்சம் (ரூபாய் முந்நூற்று இருபது லட்சம் மட்டும்) முழுவதையும் மாநிலச் சிறப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

4. மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட பயிற்சிகளுக்கான செலவினம், கீழ்வரும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

> "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் KR சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கான நலத் திட்டங்கள் 09 உதவி தொகை 09 ஏனையவை (DPC 2225 01 277 KR 0998)"

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.25.00 கோடி (ரூபாய் இருபத்தைந்து கோடி மட்டும்) செலவினம் தொடர்புடைய திட்டங்கள் ஆணையர், ஆதிதிராவிடர் நலம் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். இதற்கான செலவினம் பணமாக வழங்கப்படாமல் தாட்கோவில் கீழ்காணும் அலுவலர் பெயர் வைப்புத் தொகை கணக்கு தலைப்பில் காசோலை/வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra Credit) வரவு வைக்கப்படவேண்டும். இதற்கான அதிகாரம் ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அளிக்கப்படுகிறது.

"8443 – உரிமையியல் வைப்புத் தொகைகள் – 800 இதர வைப்பு தொகைகள் – BY – தமிழ்நாடு வீட்டுவசதி வளர்ச்சிக் கழக வைப்புத் தொகைகள் தாட்கோவின் வைப்புத் தொகைகள் (தாட்கோ)

(DPC: 8443 – 00 – 800 – BY – 0004) (Outgo)
(DPC: 8443 – 00 – 800 – BY – 000G) (Receipt) "

6. மேற்கண்ட பயிற்சிகளுக்கான நிர்வாகம்/விளம்பரம்/விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு ஆகிய செலவினத்திற்காக மொத்த ஒதுக்கீட்டுத்தொகையில் 5 சதவீத தொகையான ரூ.125.00 இலட்சம் (ரூபாய் நூற்று இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) ஒதுக்கப்பட்டுள்ளது. பயிற்சிகளுக்கு ஒதுக்கிய தொகையில், தேவையின் அடிப்படையில் சிற்சில மாற்றங்கள் செய்து திட்டங்களை செயல்படுத்த தாட்கோ, மேலாண்மை இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

7. இத்திட்டங்களை செயல்படுத்த நிர்வாக செலவினம் 2 விழுக்காடும், விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு முகாம்களுக்காக 2 விழுக்காடும், திட்ட செயலாக்க கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு பணிகளுக்கு 1 விழுக்காடும் இந்நிதியிலிருந்து பயன்படுத்திக் கொள்ள மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8. மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட பயிற்சிகளுக்காக பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பயிற்சியாளர்கள் தேர்வு செய்வதில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தச்சட்டம் (ம) விதிமுறை (Tamilnadu Transparency in Tender Act & Rules) பின்பற்றப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 52294/ஆதி(ம)பந/ 2010, நாள். 20.9.2010 –ல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

விஷ்வநாத் ஷெகாவ்கர்,
அரசு முதன்மைச்செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 101.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 5
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை – 5
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை–1) சென்னை – 35
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 6.

நகல்
நிதித்துறை, சென்னை – 9
திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை – 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் தனிச்செயலர், சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கமபா) (ஆதிந7) (ஆதிந5) (அநமு1) (ஆதிந3) (ஆதிந4) (ஆதிந8) துறை, சென்னை – 9.
இ.கோ./உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.